# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)

## டெல்லியில் நடந்தது என்ன!

தமிழீழ விடுதலை அமைப்புக்களும் இந்திய அரசின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்புகளின்போது தமிழீழத்திற்கு குறைவான கோரிக்கை ஒன்றை முன்வைக்க வேண்டும், அதை நாம் இலங்கை அரசிடம் முன்வைப்போம், அதன் மூலம் ஏதாவதொரு தீர்வினைக்காண முயற்சிப்போம் என இந்திய அரசின் பிரதிநிதிகள் வற்புறுத்திக்கொண்டிருந்தனர், அப்போது தமிழர் விடுதலைக்கூட்டணியினர் மூன்று அம்சக்கோரிக்கைகளைக்கொண்ட ஒரு பிரேரணையை வற்புறுத்தினர்.

1. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.
2. சட்ட அமுலாக்கம், காணிக்குடியேற்றம் என்பன எமது கட்டுப்பாட்டின் கீழ் இருத்தல் வேண்டும் என்றும், குறிப்பிட்டனர்.

"TULF"இன் கோரிக்கைகளை "LTTE,ENLF" அமைப்பின் பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, அதேவேளை "PLOT" இன் பிரதிநிதிகள், எந்தவொரு கோரிக்கையையும் முன்வைக்காது பேச்சுவார்த்தையின் போதும் பேசா மடந்தைகளாக இருந்தனர். இதேவேளை ஏனைய இயக்கங்களின் பிரதிநிதிகள் "PLOT" இயக்கத்தினரை நோக்கி, சுவிற்சலாந்து நாட்டு முறையைப்பின்பற்றிய சமஷ்டி அரசியல் முறையை இடைக்காலத்தீர்வாக முன்வைத்த நீங்கள், இப்போது ஏன் பேசாமல் இருக்கிறீர்கள் எனக்கேட்டபோது வாக்குவாதம் ஏற்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவொன்றை அமைப்பது தொடர்பாக "TULF" இற்கோ "PLOT" இற்கோ எந்தவித சம்பந்தமோ, அக்கறையோ இருக்கவில்லை. போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு அமைப்பதுபற்றி "PLOT" இனர் கருத்துத்தெரிவிக்க முற்பட்டபோது, திரு. றெமேஸ் பண்டாரி குறுக்கிட்டு, நீங்கள் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள், உங்களது கருத்துக்களை அறிய வேண்டிய அவசியம் எமக்கில்லை எனக்கூறி பேசக்கொடுத்தவரை இருக்கையில் அமர்த்தினார்.

பகாமாஸ் தீவில் நடைபெறவிருக்கும் பொதுநல மகாநாட்டில் இந்தியப்பிரதமர் ரஜீவ்காந்தி, ஜெயவர்த்தனவுடன் பேசவிருப்பதாக, இந்திய அதிகாரிகள் குறிப்பிட்ட போது, "LTTE" பிரதிநிதிகள், தமிழீழத்திற்கு குறைவான எந்தவொரு தீர்வினையும் இறுதிவரை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். இதனால் பகாமாஸ் தீவில் ரஜீவ்-ஜெயவர்த்தன சந்திப்பின் போது கூட்டணியினர் முன்வைத்த கோரிக்கை பற்றியே பேசமுடியும் என இந்திய அதிகாரிகள் கூறினர்.

தொடர்ச்சி மறுபக்கம்

........... ........வாற்றுக்க, கட்டளைாரால்
முன்வைக்கப்பட்ட கொள்கையை ஏற்ற, விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் "EROS" பாலகுமாரும் கையொப்பமிட்டனர் எனக்கூறி செய்யும் பிரச்சாரம் அப்பட்டமான பொய் என்பது வெளிப்படை.

மேலும் திம்புவில் இரண்டாம் கட்டப்பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தபின்பு, உமாமகேஸ்வரன் ரஜீவ் காந்தியை சந்திக்கவோ, அல்லது ரஜீவ் காந்தி உமாமகேஸ்வரனிற்கு அழைப்பு விடவோ இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

"PLOT" இன் புழுகுதனங்களையும், பொய்ப்பிரச்சாரங்களையும் தொடர்ந்தும் நம்பி ஏமாற வேண்டாம் எனக்கேட்டுக்கொள்கிறோம்

# பூட்டான் பேச்சுவார்த்தையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

**ஆதாரம்:**
**புளொட் வெளியீடு**

## சுவிஸ் 'கன்டோன்' ஆட்சி முறை வேண்டும் என்கிறார் உமா

8.7.10.7.85

சிங்களத்துடன் தமிழும் ஒரு அரச கரும மொழி என்ற அந்தஸ்து பெற வேண்டும். அதே வேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழ் மாகாணங்களாக இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"சுவிற்சர்லாந்து முறையை அடிப்படையாகக் கொண்ட "கன்டோன்" என்ற ஆட்சிப் பிரதேசங்களான அமைப்பு தான எமக்கு தேவை. எங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அடிப்படை உரிமையும் எமக்கு தேவை: இத்தகைய பிரதேசங்களில் தங்கள் கலாசாரத்தையும், மொழியையும் கடைப்பிடிக்கும் சுதந்திரம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

"வடக்கும், கிழக்கும் ஒரே மாகாணமாக வேண்டும். அப்பகுதிகளில் மக்கட் தொகை உண்மை நிலையை அரசு பெரும்பான்மையில் சிங்கள மக்களை குடியமர்த்துவதன் மூலம் மாற்றி விடும் என்பதால் வடக்கும், கிழக்கும் அடுத்தடுத்துள்ள பகுதிகளாக இருக்க வேண்டும்" என்றார்.

"திம்பு பேச்சுகளில் கலந்து கொள்வது தங்கள் கழகத்தை ஒரு அரசியல் சக்தியாக சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கான முதற்படி" என்றும் கூறினார்.

தேவி என்ற சஞ்சிகைக்கு தோழர் உமா 23.01.85 இல் அளித்த பேட்டியின் ஒரு பகுதி:

**தேவி நிருபர் கேள்வி:** "நீங்கள் விடுதலை இயக்க தலைவர்களை ஒன்றுபடுத்தப் போவதாகச் சொன்னீர்கள். இதில் அமிர்தலிங்கத்தையும் சந்திப்பீர்களா?"

**உமா பதில்:** ஆயுதமேந்தி போராடும் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்களைத்தான் நான் சந்தித்து பேச விரும்புகிறேனே தவிர அமிர்தலிங்கத்துடன் அல்ல. அமிர்தலிங்கம் ஜெயவர்த்தனாவை நம்பி ஏமாந்தவர். அவர் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்க முடியும் என்று நம்புகிறார். அவரின் நம்பிக்கைக்கு குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை.